IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**IA No**.795/2018 **in OS. No**.27/2015 **Date**: 08.11.2023

PW -1 – குமார்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் வழக்கமாக தமிழில் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ல் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதிலுள்ள கைரேகை யாருடையது என்று குறிப்பிடப்படவில்லை என்பதால் அது மோசடியானது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 ல் அதிலுள்ள கைரேகை யாருடையது என்று குறிப்பிடப்படவில்லை என்பதால் அது மோசடியானது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 ல் அதிலுள்ள கைரேகை யாருடையது என்று குறிப்பிடப்படவில்லை என்பதால் அது மோசடியானது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 அதிலுள்ள கைரேகை யாருடையது என்று குறிப்பிடப்படவில்லை என்பதால் அது மோசடியானது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 என் தகப்பனார் பெயர் மாரிதேவர் என்று உள்ளதால் அந்த ஆவணமும் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 மற்றும் 7 ல் என்னுடைய முகவரி மசையன் தெரு என்று உள்ளதால் அந்த ஆவணமும் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 லும் என்னுடைய முகவரி தவறாக உள்ளதால் அந்த ஆவணமும் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 யை எதிருரை தாக்கல் செய்த பிறகு மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.11 ல் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்பதால் அந்த ஆவணமும் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.12,13,14,15 ஆகியவைகள் கதவு எண் இல்லாமல் எதிருரை தாக்கல் செய்த பிறகு மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணமும் முதல் விசாரணையின் போது தாக்கல் செய்த ஆவணங்களும் ஒன்றுகொன்று முரணாக உள்ளதால் அவைகள் செல்லாது என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. 2 ம் எதிர்மனுதாரர் கிரையம் செய்து கொடுக்காததை சாதகமாக பயன்படுத்தி கொண்டு அந்த நிலத்தில் அத்துமீறி நுழைந்து மோசடியான ஆவணங்களை தயார் செய்து உரிமை கொண்டாடுவது செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் 2 ம் எதிர்மனுதாரருடன் கூட்டு சேர்ந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-குமார்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.